1979 ஏப்ரல் 21]

ஆ. கள்ளக்குறிச்சியில் குடிநீர் தட்டுபாடு குறித்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, 'தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி பேருராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்து' ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி பேருராட்சியில தற்போது கோமுகி ஆற்றின் அடித்தள நீர் எடுக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது நீர் மட்டம் குறைந்து போவதால் தேவைப்படும் குடிநீர் கிடைக்கவில்லை. ஆகவே தற்போது இருக்கும் நீர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு மணிமுத்தாறு ஆற்றிலிருந்து நீர் கொண்டு வருவது சம்பந்தப்பட்ட ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வு வேலைகள் முடிந்த பின்னர் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு ஆட்சி ஒப்புகல் பெற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அரசு ஒப்புதல் பெற்ற பின்னர் முறைப்படி வேலைகளைச்செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சிப் பகுதியிலேயும் சின்னசேலம் பகுதியிலேயும், எவ்வளவுதான் தமிழ்நாட்டிலே வெள்ளம் ஏற்பட்டாலும் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது, ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சென்ற ஆண்டும் இதே பிரச்சினையை நான் எழுப்பியபோது ஆய்வு நடப்பதாகத் தான் அறிக்கை இங்கே கொடுக்கப்பட்டது. எனவே ஆய்வை துரிதமாக முடித்து விரைவிலே ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு உடனடியாக அதற்கு அங்கீகாரம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, குடிதண்ணீர் கொடுப்பதில் உள்ள ஒரு முக்கியமான பிரச்சினையை நான் இந்த நேரத்திலே சொல்வது முக்கியம். உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் முக்கியம் என்று சொல்வார்கள். முக்கியமான ஒன்றைவிட்டுவிட்டார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வந்தபிறகு தான் அதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள், குடிக்கத் தண்ணீர் என்பதையும் சேர்த்திருக்கிறார்கள், உண்ண உணவும் இருக்க இடமும், உடுக்க உடையும் அதோடு குடிக்க நீரும் கொடுக்கப்பட வேண்டும். உண்ண உணவு முக்கியம், உணவு இல்லாமல் இருக்க முடியும், ஆனால் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் இருக்க முடியாது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 21

[முற்பகல் 10-20]

எனவே, 4. 5 நாட்களுக்குக் கூட உண்ணாவிரதம் இருந்து விட முடியும். உண்ணாவிரதம் இருப்பவர்கள் கூட, குடி தண்ணீர் with a pinch of salt குடித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். எனவே, இந்த மூன்றுக்கு முன்னால், தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள அரசு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், அதற்கு என்ன என்ன புது எதிர்ப்புகள் வருகின்றன என்பதைப் பார்க்கிறோம். ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கிறோம். ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்தால், பக்கத்திலே இருக்கின்ற தென்னை மாம் பாதிக் கிறது என்றெல்லாம் புகார் வருகிறது. எனவே, இதையெல் லாம் பார்த்து, மக்களிடமிருந்து எதிர்ப்பு வராமலே—குடி தண்ணீர் எடுத்தால், நீர்ப்பாசனம் பாதிக்கப்படுகிறது என்று சொல்வார்களே, அந்த மாதிரி பாதிப்பு ஏற்படாமலிருக்க ஆய்வு செய்வதை மிக கவனமாகச் செய்வதால், தாமதம் ஆகிறது, இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதி இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப் படுத்தி, தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்,

குடிதண்ணீர்தான் முக்கியம். எனவே, அரசு கிராமக் குடி தண்ணீருக்காக மட்டும் ரூ, 16 கோடி ஒதுக்கியிருக்கிறது—ஒதுக்கி யிருக்கிறோம். அந்தத் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்வி நேரத்தில் அதையெல்லாம் சொல்ல அனுமதிக்கமாட்டீர்கள். இருந்தாலும், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். குடி தண்ணீர் திட்டங் களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் அவர்களும் உதவி செய்ய வேண்டும்.

திரு. சேலம் மு, ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மக்கள் இதற்கு எந்தவிதமான எதிர்ப்பையும் தெரிவிக்கமாட்டார்கள். அவர்கள் அதற்கு வரவேற்பு தருவார்கள். எனவே, புரட்சித் தலைவர் என்னுடைய திருமணத்திற்கு வரும்போதே அதற்கான கால்கோள் விழா நடைபெறுவதாக இருந்தது. ஆனால், நடைபெறவில்லை. எனவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, முதலமைச்சர் திருக்கரங்களால் கால்கோள் விழா நடத்தி, திட்டத்தை நிறை வேற்ற அமைச்சரவர்கள் உறுதி தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வரவர்களே, இந்த நல்ல உறுதிமொழி கிடைத்து விட்டபடியால் இன்றே சூப்பரின்டெண்டிங் இன்ஜினியருக்கு டெலிஃபோன் செய்து, இந்த வேலையைத் துரிதப்படுத்தும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.